# செஞ்சிலுவைக்குழு புதுக்குடியிருப்பு விஜயம் சேதவிபரம் ஜெனிவாவுக்கு அனுப்பப்பட்டது

பக்கங்கள் நான்கு விலை ரூபா:- 4-50

முரசொலி

முரசு 05 ஒலி 68 பிரமோதூத தை 21 (03-02-1991) ஞாயிறு

பொது நூலகம் 199?.07. பகுதி

புதுக்குடியிருப்பில் கடந்த 30 ஆம் திகதி இடம்பெற்ற அகோர விமானத் தாக்குதலினால் ஏற்பட்ட சேத விபரங்கள் குறித்த அறிக்கையை செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக்குழு ஜெனிவாவில் உள்ள அதன் தலைமை அலுவலகத்துக்கும், கொழும்பு அலுவலகத்துக்கும் அனுப்பிவைத்துள்ளது. நேற்று முன்தினம் இப்பகுதிக்கு சென்ற இக்குழுவினர் பாதிக்கப்பட்ட இடங்களைப் பார்வையிட்டனர்: இதேசமயம் இங்குள்ள இலங்கை செஞ்சிலுவைச்சங்க கிளினிக் சென்ரர் மீதும் விமானக் குண்டு வீச்சு ஏற்பட்டு அது முற்றாகச் சேதமடைந்ததாகவும் செஞ்சிலுவைச் சங்க வட்டாரங்கள் தெரிவித்தன. இப்பகுதி மக்களுக்கு அவசிய மருத்துவ சேவைகளை ஆற்றிவந்த இந்த 'கிளினிக் சென்றரும்' சேதமானதால் மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். (70, 74)

# வடக்கில் தொடரும் விமானத் தாக்குதல்

## பல பொதுமக்கள் படுகாயம்

உலகின் கவனம் வளைகுடாவின் மீது திரும்பியிருப்பதைப் பயன்படுத்தி ஸ்ரீலங்கா அரசு வடக்கின் பல பகுதிகளை தொடர்ந்து குண்டு வீசித்தாக்கிவருகிறது நேற்றைய தாக்குதலில் கொக்குவிலில் உள்ள மகளிர் பாடசாலை ஒன்று பலத்த சேதத்திற்குள்ளாகியது. விடுமுறை தினமானதால் அதிர்ஷ்டவசமாகப் பிள்ளைகள் பாதிக்கப்படவில்லை.

## கொக்குவிலில் குண்டு வீச்சு மகளிர் கல்லூரி முற்றாகச் சேதம்

நேற்றுப் பிற்பகல் 2.30 மணியளவில் இரண்டு பொம்மர்கள் கொக்குவில் கிழக்குப் பகுதியில் கண்மூடித்தனமாக நான்கு குண்டுகளை வீசின.

இத்தாக்குதலினால் ஸ்ரீ இராமகிருஷ்ண சாரதா மகளிர் கல்லூரி முற்றாகச் சேதம் அடைந்தது.

இப்பாடசாலையில் அகதிகளாக இருந்த தையிட்டியைச் சேர்ந்த செல்வரட்ணம் கீதா(16) என்பவர் தனது

...04 ஆம் பக்கம் பார்க்க

## குமரபுரத்தில் வான் தாக்குதல்

பரந்தன் குமரபுரப் பகுதியில் நேற்று முன்தினம் மூன்று பொம்மர்கள் குண்டு வீசுத்

...04 ஆம் பக்கம் பார்க்க

## முறிகண்டியிலும் குண்டு வீச்சு தந்தை, மகள் உட்பட மூவர் பலி

முறிகண்டியில் நேற்றுமுன் தினம் மாலை மூன்று குண்டு வீச்சு விமானங்கள் தாக்குதல்களை மேற்கொண்டன. தந்தையும் மகளும் உட்பட மூவர் பலியாகினர். காடுகளிலும் குண்டுகள் வீசப்பட்டன.

சில கடைகள் சேதமடைந்ததுடன் முறிகண்டியைச் சேர்ந்த தவேந்தகுமார்(12), இ. நாகராசா(30), நாகராசா லோஜினி(04) ஆகியோர் பலி

—04 ஆம் பக்கம் பார்க்க

## நாச்சிக்குடாவில்பொம்மர் தாக்குதல் இருவர் காயம்; கடைகள் சேதம்

நேற்றுக்காலை மன்னார் மாவட்டம் நாச்சிக்குடாவில் குண்டுவீச்சுத் தாக்குதல் நடைபெற்றுள்ளது. நாச்சிக்குடாச்சந்தி, முழங்காவில் பகுதிகளில் நடந்த தாக்குதல்களில் சிவகுரு(54), சந்திரன்(30) ஆகிய இருவர் படுகாயமடைந்தனர்.

நாச்சிக்குடாச் சந்தியில் பெற்றோல் நிலையம், தேநீர்க்கடை, கிராம முன்னேற்றச் சங்கம், சில கடை

...04 ஆம் பக்கம் பார்க்க

## குண்டு வீச்சில் காயமடைந்தவர் காட்டிற்குள் சடலமாக மீட்பு

புதுக்குடியிருப்புப் பகுதியில் கடந்த புதன்கிழமை நடைபெற்ற அகோர விமானத் தாக்குதலின் போது காணாமற் போன புதுக்குடியிருப்பைச் சேர்ந்த அப்பன் (28) என்பவர் காட்டுப் பகுதியில் சடலமாக மீட்கப்பட்டார்.

குண்டு வீச்சில் காயமடைந்த இவர் திக்குத் தெரியாது காட்டிற்குள் ஓடியதாகவும், அங்கு இரத்தம் அதிகமாக வெளியேறியதால் இறந்திருக்

—04 ஆம் பக்கம் பார்க்க

## நாவற்குழித் தாக்குதலில் மரத்தில் இருந்தவர் தப்பினார்

நேற்றுக் காலை 11 00மணியளவில் நாவற்குழியில் இரு பொம்மர்கள் அன்றின் கொம்பனிக்கு முன்னால் உள்ள குடிமனைகளை நோக்கிகுண்டுகளை வீசின,

இத்தாக்குதலினால் கந்தன் செல்லன் (49) காயமடைந்தார்.

காயமடைந்த செல்லன் சம்பவத்தின் போது தென்னை மரத்தில் இருந்ததாகவும் குண்டு தாக்கியதால் அவரின்

—04 ஆம் பக்கம் பார்க்க

## மாவிட்டபுரம் மோதல் 3 புலிகள் வீரமரணம்

நேற்றுக்காலை 11.30 மணியளவில் .மாவிட்டபுரம் இராணுவ முகாமில் இருந்து வெளியேற முற்பட்ட இராணுவத்தினருக்கும் விடுதலைப் புலிகளிற்கும் இடையே பலத்த மோதல் இடம் பெற்றது.

இம் மோதலில் இராணுவ தரப்பில் ஏற்பட்ட சேத விபரம் தெரியவில்லை இம்மோதலில் புலிகள் தரப்பில் செந்தில் (செல்லப்பா சுரேஸ்குமார், அளவெட்டி) சந்திரன் (சின்னையா குணசேகரன், கிளிநொச்சி) வாமதேவன் ஆகியோர் வீரமரணத்தைத் தழுவிக்கொண்டனர். (71)

## புத்தூரில் ஹெலி தாக்கு இரு சிறுவர் காயம்

நேற்று மாலை 5 மணியளவில் புத்தூர் வாதரவத்தை பகுதியில் ஹெலி ஒன்று நடாத்திய துப்பாக்கிச் சூட்டில் இரு சிறுவர்கள் காயமடைந்தனர்.

தி. பாரதிதாஸன் (11) ப.சுதாகரன் ஆகிய இரு சிறுவர்களே காயமடைந்தவர்களாவர் இத்தாக்குதலில்மேற்படி வீடும் சேதமடைந்தது. (ப-14)

## மனவருத்தத்துடன் தமிழக அரசு கலைக்கப்பட்டதுஎன்கிறார்,பிரதமர்

தமிழக அரசைக் கலைத்தமையை ஆட்சேபித்து எதிர்வரும் 6-ம் திகதி இந்தியாவெங்கும் எதிர்க்கட்சிகள் நடாத்தத் திட்டமிட்டுள்ள ஒருநாள் போராட்டத்திற்கு பிரதமர் சந்திரசேகர் நேற்று கண்டனம் தெரிவித்துள்ளார்.

நாட்டின் ஜனநாயகத்தைக் காக்க சில கசப்பான முடிவுகளை எடுக்க வேண்டியுள்ளது. தமிழகம் மீது மிகவும் மனவருத்தத்துடனேயே நடவடிக்கை எடுத்ததாக பிரதமர் சந்திரசேகர் கூறினார்.

வேறு எவரது தூண்டுதலும்

—04 ஆம் பக்கம் பார்க்க

## தமிழகத்தில் வாகனங்கள் எரிப்பு இதுவரை 4000 பேர் கைது

தமிழ்நாட்டில் நேற்று முன்தினம் இரவும் லொறிகளும், பஸ்களும் தீக்கிரையாக்கப்பட்டுள்ளன. சேலம், திருநெல்வேலிப்பகுதிகளில் லொறிகளும், மதுராண்டகம், மாங்காடு பகுதிகளில் பஸ்களும் தீக்கிரையாக்கப்பட்டுள்ளதாகவும் இது தொடர்பாக எட்டுப்பேர் கைதானதாகவும் தமிழக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கடந்த 30 ம் திகதி தமிழக அரசு கலைக்கப்பட்டதைத் தொடர்ந்து ஏற்பட்ட வன்முறைகள் தொடர்பாக இதுவரை நாலாயிரம் பேர் கைதா

—04 ஆம் பக்கம் பார்க்க

## தெல்லிப்பழை துர்க்காபுரத்தில் கசிப்பு வேட்டை

தெல்லிப்பழை துர்க்காபுரம் பகுதியில் வீட்டில்பதுக்கி வைத்து விற்பனை செய்த கசிப்பு கையும் மெய்யுமாக கண்டு பிடிக்கப்பட்டது.

சம்பந்தப்பட்ட நபருக்கு ஐநூறு ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

தெல்லிப்பழை தெங்குப் பனம் பொருள் உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச் சங்கத்தின் விஸ்தரிப்பு உத்தியோகத்தர் திரு. சி. ரி. மகாதேவன் தலைமையில் சென்ற சங்க பரிசோதனைக் குழுவினரே இதனைக் கண்டு பிடித்தனர். (13)

## இரு இராணுவ சிப்பாய்களை நீதிமன்றத்தில் ஆஜராக உத்தரவு

துப்பாக்கிச் சூட்டு சம்பவம் தொடர்பாக இரு இராணுவ சிப்பாய்களையும், சாரதி ஒருவரையும் கண்டி நீதிமன்றத்தில் ஆஜராகும் படி கண்டி நீதவான் உத்தரவு பிறப்பித்துள்ளார்.

கண்டி நகரில் கடந்த வருடம் ஆவணிமாதம் இடம் பெற்ற துப்பாக்கிச் சூட்டு சம்பவம் தொடர்பாகவே இவர்களை ஆஜராகும் படி உத்தரவிடப்பட்டுள்ளது.

## மண்ணெண்ணெய்க் கியூவில் பெண்ணின் சங்கிலி அபேஸ்

மண்ணெண்ணெய் வாங்குவதற்காக கியூவில் நின்ற பெண்மணி ஒருவரின் மூன்று தங்கப் பவுண் நிறையுள்ள இரு தங்கச் சங்கிலியுடன் அபகரிக்கப்பட்டது.

பண்டத்தரிப்பு பல நோக்குக் கூட்டுறவுச் சங்க ஒன்பதாம் இலக்கக் கிளையில் மண்ணெண்ணெய் பங்கீடு செய்து வழங்கப்பட்ட போது இச்சம்பவம் நிகழ்ந்தது. (13)

## காரைநகரில் ஷெல் வீச்சு

காரைநகர் கடற்படைமுகாமில் இருந்து நேற்று முன்

—04 ஆம் பக்கம் பார்க்க

## சாவகச்சேரி பேக்கரிகள் கேக் தயாரிக்கின்றன

சாவகச்சேரி வர்த்தகர் சங்கம் தீர்மானித்த விலையான 8.50 சதத்திற்கு 350 கிராம் நிறையுள்ள பாண்விற்பனை செய்வதாக ஒப்புக் கொண்டு நிர்ணயிக்கப்பட்டமொத்தவிலையில் மாவைப்பெற்றுக் கொண்ட பல பேக்கரி உரிமையாளர்கள் பாண் போடாமல் அதே மாவில் 150 கிராம் எடையுள்ள ஒரு சொ[illegible] பணிஸை உற்பத்தி செய்து பேக்கரிகளில் வைத்[illegible] 6 ரூபாவாகவும், வெளிக்

— 04 ஆம் பக்கம் பார்[illegible]

## நீங்கள் 'ஒலி' வாசகரா? வேகமாகவாசிக்க ஒரு குறுக்குவழி இதோ

சில சமயங்களில் நாம் பிரயாணம் செய்யும்பொழுது நமக்கருகில் உள்ள ஆசனத்தில் அமர்ந்திருப்பவரிடம் எமது அபிமான எழுத்தாளர் ஒருவர் எழுதிய நாவல் ஒன்று இருக்கலாம். அதைப் பெற்று வாசிக்கவோ அவகாசம் போதாது. அப்படியான சந்தர்ப்பங்களில் நமக்கு கைகொடுக்க இதோ ஒரு குறுக்குவழி-

முதலில் முன்னுரையை வாசியுங்கள். அதன் பின் அத்தியாய வாரியாகப் பொருள் அடக்கத்தில் போடப்பட்டிருக்கும் தலைப்புகள், ஆசிரியரின் முன்னுரை ஆகியவற்றை நேரம் கொஞ்சம் செலவானாலும் பரவாயில்லை பல்லைக் கடித்துக் கொண்டு துல்லியமாகப் படித்து விடுங்கள்.

பின்பு ஒவ்வோர் அத்தியாயத்தின் முதல் பந்தியில் உள்ள முதல் வாக்கியம், கடைசி வாக்கியம் ஆகியவற்றைப் படியுங்கள், அதேபோல் ஒவ்வொரு அத்தியாயத்தையும் படிக்கவும். இப்படிச் செய்வதால் ஒவ்வொரு அத்தியாயத்திலும் என்ன நடக்கிறது என்பதைச் சுலபமாகக் கிரகித்துக் கொள்ளலாம்.

இந்த சுலப வழியை ஒருமுறை பரீட்சித்துப் பாருங்கள். சாதாரணமாக ஒருமணி நேரத்தில் வாசிக்கக் கூடிய ஒரு புத்தகத்தைப் பத்தே நிமிடங்களில் ஊதித் தள்ளி விடலாம். (16)

# இளைஞர் சேவை அதிகாரிகள் ஆசிரியர்களாகப்பதவி மாற்றம்

தேசிய இளைஞர் சேவை மன்றத்தில் உதவி இளைஞர் சேவை அதிகாரிகளாகக் கடமையாற்றிவருபவர்கள் பாடசாலைகளில் ஆரம்ப ஆசிரியர்களாக நியமனம் செய்யப்படவுள்ளனர்.

உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளில் மூன்று வருடங்களுக்குக் குறையாமல் கடமை புரிந்தவர்களுக்கே முதலில் இந்த நியமனங்கள் வழங்கப்படவுள்ளன.

இத் திட்டத்தின் கீழ் யாழ் மாவட்டத்தில் முதல் கட்டமாக நான்கு உதவி இளைஞர் சேவை அதிகாரிகள் ஆரம்ப உதவி ஆசிரியர்களாகப் பதவி மாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களுக்கு இம் மாதம் முதல் பாடசாலைகளில் கடமை புரிவதற்கான அனுமதியைக் கல்வித் திணைக்களம் வழங்கியுள்ளது.

செல்வி ஜெயராணி பொன்னுத்துரை (மெய்கண்டான் மகாவித்தியாலயம்), செல்வி தர்மலிங்கம் கலாமதி (இராமப் பிள்ளை வித்தியாலயம் கரந்தன்), கந்தையா சிறிகந்தவேள் (கொக்குவில் இந்துக் கல்லூரி) திருமதி சந்திரகுமார் (இராமனாதன் கல்லூரி, மருதனாமடம்) ஆகியோருக்கே ஆசிரிய நியமனம் வழங்கப்பட்டுள்ளது. (16)

## அவுஸ்திரேலியாவில் கல்வி கற்பதற்கு இலங்கை மாணவருக்குப் புலமைப்பரிசில்

அவுஸ்திரேலிய அரசாங்கம் இலங்கை மாணவர்களுக்கு பட்டப்படிப்புக்கான புலமைப் பரிசில்கள் வழங்க விருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

திறமை மற்றும் சமத்துவ அடிப்படைகளில் இப்புலமைப் பரிசில்கள் வழங்கப்படும் என்றும் இத்திட்டத்தின் கீழ் அவுஸ்திரேலியா சென்று பட்டப்படிப்பை மேற்கொள்ள விரும்பும் மாணவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

அவுஸ்திரேலியா தற்போது நடைமுறைப்படுத்தும் பயிற்சித்திட்டத்துக்குப் புறம்பாகவே இப்புலமைப்பரிசில்கள் வழங்கப்படவுள்ளன என்றும் மாணவர்கள் திறமை அடிப்படையில் ஒரு பகுதியினரும் பொருளாதார அடிப்படையில் ஒரு பகுதியினருமாகத் தெரிவுசெய்யப்படுவர் என்றும் அடிப்படைத் தகைமைகளைக் கொண்ட வசதிகுறைந்த மாணவிகளுக்கு முன்னுரிமை அளிக்கப்படும் என்றும், விண்ணப்பதாரர்கள் அடுத்த வருடம் ஜனவரி மாதம் முதலாம் திகதி 18 வயதுக்கும் 28 வயதுக்கும் இடைப்பட்டவராக இருக்க வேண்டும். க. பொ. த. உயர்தரப்பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் சித்தியடைந்திருக்க வேண்டும் என்றும் இதுபற்றி அறிவிக்கப்படுகிறது.

பட்டதாரிகள் இப்புலமைப் பரிசில்களுக்கு விண்ணப்பிக்க முடியாது. இத்திட்டத்தின் கீழ் அவுஸ்திரேலியப் பல்கலைக்கழகங்களில் பட்டப்படிப்பை மேற்கொள்ள இவ்வருடம் சுமார் நாற்பது பேருக்குப் புலமைப்பரிசில்கள் வழங்கப்படும். விண்ணப்பங்கள் மார்ச்மாதம் 8ஆம் திகதிக்கு முன்னர் கல்வியதிகாரி, அவுஸ்திரேலிய உயர்ஸ்தானிகராலயம் த.பெ இல. 742 கொழும்பு-7 என்ற முகவரிக்கு அனுப்பப்படவேண்டும் என்றும் தகவல் வெளியிடப்பட்டுள்ளது.

## 9ஆம் ஆண்டுக்கு மேற்பட்ட மாணவர்க்கு கோட்ட மட்டத்தில் சித்திரப்போட்டி

யாழ் மாவட்டத்தில் 9ஆம் ஆண்டுக்கு மேற்பட்ட வகுப்புக்கள் உள்ள பாடசாலைகளுக்கான கட்டுரைப்போட்டியும், சித்திரப்போட்டியும் கோட்ட மட்டத்தில் நடைபெறவுள்ளன.

கட்டுரைப் போட்டி 'சுயதொழில் வேலைவாய்ப்பின்மையை ஒழித்தல்' என்னும் தலைப்பில் (700 சொற்கள் முதல் 1000 சொற்கள் வரை) நடைபெறவுள்ளது.

சித்திரப் போட்டி 'ஒற்றுமையே சமாதானத்தின் அத்திவாரம்' என்னும் தலைப்பில் (18''×15'' அளவுத் தாளில்) நடைபெறவுள்ளது.

மாணவர்கள் இத்தலைப்புக்களில் தமது ஆக்கங்களைத் தயாரித்து அதிபர்களின் சிபார்சுடன் கோட்டங்களுக்கு அனுப்பவேண்டுமென அறிவிக்கப்பட்டுள்ளது. (12)

### தானியச் செய்கை

தென்மராட்சி பலநோக்குக் கூட்டுறவு சங்கம், தனங்கிளப்பு, மறவன்புலோ, நாவற்குழி போன்ற பகுதிகளில் நெல் அறுவடை முடிந்த பின்பு 15 ஏக்கரில் சிறுதானியப் பயிர்ச்செய்கை மேற்கொள்ள நடவடிக்கை எடுத்துள்ளது. (52)

## பீரங்கித் தாக்குதலின் பின்னர் கடற்படையால் மீனவர் கைது!

கீரிமலை கடற்பகுதியில் கட்டு மரத்தில் மீன் பிடித்துக் கொண்டிருந்த இருவரை நோக்கி கடற்படையினர் பீரங்கித் தாக்குதலை மேற்கொண்டுள்ளனர்.

கடந்த வியாழக்கிழமை காலை இடம் பெற்ற இச் சம்பவத்தில் மயிரிழையில் உயிர்தப்பிய இந்த இரு மீனவர்களும் கடற்படையினரால் கைது செய்யப்பட்டனர்.

இவர்கள் பின்னர் எச்சரிக்கைசெய்யப்பட்டுவிடுதலை செய்யப்பட்டதாகவும் தெரிவிக்கப் படுகின்றது. (48)

## சிறு விளம்பரம்

### தேவை

ஆங்கில மருந்து விற்பனை நிலையத்திற்குப் பெண் விகிதர் தேவை. மருந்து விற்பனையில் அனுபவம் தேவை. தகுந்த அத்தாட்சியுடன் 06 02. 91 இல் நேரில் வரவும். ''வெண்கோ'' 250, ஆஸ்பத்திரி வீதி, (O.P.D முன்பாக) யாழ் நகர். 02028

### விற்பனைக்கு

அளவெட்டி மேற்குக் கிராமிய உற்பத்திக் குழுவினரால் சிறந்த இனக் கத்தரி, தக்காளி, மிளகாய், கறிமிளகாய், கோவா, பூக்கோவா, இலைக்கோவா, நல்லினத் தென்னங்கன்றுகள் மற்றும் சில விதைவகைகளும் மலிவான விலையில் விற்பனை செய்யப்படுகிறது. தொடர்பு: மூர்த்தி, குமணன் வீதி, அளவெட்டி தெற்கு. (எரிந்த பேக்கரி முன்பாக). 02003

### விற்பனைக்கு

அஷ்டலக்ஷ்மி மாதக்கலண்டர் ரூபா 20/- பல வண்ணப் படங்களுடன் எங்கும் கிடைக்கும். அஷ்டலக்ஷ்மி வெளியீட்டகம், கைதடி. 02011

### வகுப்பு

பரத நாட்டியம் பயில விரும்பும் மாணவிகள் சனி, ஞாயிற்றுக்கிழமைகளில் காலை 9 00 மணி முதல் 11 . 30 வரை. தொடர்பு கொள்ளுங்கள். 230, நாவலர் வீதி (இலுப்பையடி சந்திக்கு அருகாமை), யாழ்ப்பாணம். 02019

### சேவை

நல்லூரில் தரமான போட்டோகிரட் பிரதிகளுக்கும், கறுப்பு, வெள்ளைப் புகைப்படங்களுக்கும் நாடவேண்டிய ஸ்தாபனம் ''சித்திராலயா'', இல 351, கோவில் வீதி, நல்லூர். (நல்லூர் கோவில் பின்வீதியில், கம்பன்கோட்டம் முன்பாக). 02026

## உங்களுக்கு உரியவையா?

எஸ். கந்தையா என்பவருடைய இலங்கை வங்கிக் காசோலை ஒன்று இராசாவின் தோட்டத்தைச் சேர்ந்த சு. செல்வரட்ணம் என்பவரினால் கண்டெடுக்கப்பட்டு முரசொலி அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

மற்றும் சாவகச்சேரி பெருங்குளம் சந்தியில் கண்டெடுக்கப்பட்ட நசிறிரஞ்சன் (வலி வடக்கு) என்பவரின் குடும்பத்திற்குச் சொந்தமான உணவு முத்திரைகளும், நல்லூர் உதவி அரச அதிபர் பிரிவுக்குரிய துரையப்பா செல்லத்துரை என்பவருக்குச் சொந்தமான மாதாந்த உதவிப்பண அட்டை, வைத்தியப் பதிவு அட்டை என்பனவும் கண்டெடுக்கப்பட்டு முரசொலி அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளன. உரியவர்கள் அலுவலக நேரத்தில் ஆசிரிய பீடத்தில் ஆதாரம் காட்டிப் பெற்றுக் கொள்ளலாம்.

## வேலணையில் அதிபர்கள் கூட்டம்

நாளை 4 ஆம் திகதி திங்கட்கிழமை வேலணைக்கோட்டத்தைச் சேர்ந்த சகல அதிபர்களுக்கான கூட்டம் சேர் வைத்திலிங்கம் துரைச்சாமி மத்திய மகா வித்தியாலயத்தில் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இக் கூட்டத்திற்கு வேலணைக் கோட்டப் பாடசாலைகளைச் சேர்ந்த சகல அதிபர்களையும் கலந்து கொள்ளுமாறு வேலணைக் கோட்டக் கல்வி அதிகாரி கேட்டுக் கொண்டுள்ளார். (70)

## புதிய தவணை விபரம் அறிவிப்பு

யாழ் மாவட்டத்தில் உள்ள பாடசாலைகளுக்கான புதிய தவணைகள் பற்றி கோட்டக் கல்வி அலுவலகங்களினால் பாடசாலை அதிபர்களுக்கு சுற்றறிக்கை மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது.

இவ் அறிவித்தலின்படி முதலாம் தவணை 1991-01-02 முதல் 1991-04-05 வரையும் இரண்டாம் தவணை 1991-05 06முதல் 199108 02 வரையும் மூன்றாம் தவணை 1991 09 02முதல் 91 12.06 வரையும் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (12)

## பூநகரியில் நாற்றுத் திருட்டு

பூநகரி தோட்டப் பகுதிகளில் மிளகாய்க் கன்றுகள் களவாடப்பட்டு வருகின்றன.

அண்மையில் பூநகரி செம்பன்குண்டுப் பகுதியில் நாட்டுவதற்காக பாத்தியில் வளர்க்கப்பட்ட சுமார் மூவாயிரம் கன்றுகள் திருடப்பட்டன.

பின்னர் இத்திருட்டில் ஈடுபட்டவர்களிற்கிடையில் ஏற்பட்ட கருத்து முரண்பாட்டினைத் தொடர்ந்து இக் களவு அம்பலத்திற்கு வந்தது.

இதனைத் தொடர்ந்து திருடப்பட்ட மிளகாய்க் கன்றுகளுக்கு பணம் அறவிடப்படவுள்ளது. (ப- 35)

## வேலைக்குத் திரும்ப வேண்டுமாம்

பரந்தன் இரசாயனக் கூட்டுத்தாபன ஊழியர்கள் அனைவரும் உடனடியாக வேலைக்குத் திரும்பவேண்டுமென மேற்படி கூட்டுத்தாபனத் தலைவர் உபாலி-டி. சில்வா கேட்டுள்ளதாக கொழும்புப் பத்திரிகையொன்று செய்தி வெளியிட்டுள்ளது.


## கண்ணீர் அஞ்சலி

அமரர் உயர்திரு
சண்முகம் ஞானப்பிரகாசம்

இளைப்பாறிய சிரேஷ்ட கூட்டுறவு உதவி ஆணையாளரும் (வடக்கு கிழக்கு) யாழ் மாவட்ட சிக்கன கடனுதவுகூட்டுறவுச் சங்கங்களின் சமாசமுன்னாள் தலைவரும் யாழ் மாவட்ட 'உலர்வலய அபிவிருத்திக்கழக' இணைப்பதிகாரியும், யாழ் மாவட்ட 'சமூக நல ஒன்றிய'த்தின் இணைப்பதிகாரியுமான

அமரர் உயர்திரு
சண்முகம் ஞானப்பிரகாசம்

அவர்கள் எமை விட்டுப் பிரிந்தமையால் எமது இதயம் கனிந்த கண்ணீர் அஞ்சலியை அவரது பிரிவினால் துயருறும் குடும்பத்தினருக்கும், உற்றார், உறவினர், நண்பர்களுக்கும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

''வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன்
வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்''

சென். றோசறி மாதர் ஐக்கிய நாணய சங்கம்
புங்குடுதீவு.

02033



## இடமாற்ற அறிவித்தல்

இலங்கை மின்சார சபை,
கிளிநொச்சி பிரதேச அலுவலகம்

கடந்த ஆனி மாதம் வரை மாங்குளத்தில் இயங்கி வந்த இலங்கை மின்சார சபையின் கிளிநொச்சி பிரதேச அலுவலகம், தவிர்க்க முடியாத காரணங்களால் தற்காலிகமாக பரந்தன் - பூநகரி வீதியில் உள்ள ஈஸ்வரன் அரிசி ஆலையில் அமைந்துள்ள புதிய கட்டிடத்தில் இயங்கி வருகின்றது என்பதனை பாவனையாளர்களுக்கும் பொதுமக்களுக்கும் இத்தால் அறியத் தருகிறேன்.

தொடர்பு கொள்ளவேண்டிய விலாசம்:-
கிளிநொச்சி பிரதேச அலுவலகம்,
இலங்கை மின்சார சபை,
பூநகரி வீதி,
பரந்தன்.

இப்படிக்கு
மின்பொறியியலாளர்,
கிளிநொச்சி பிரதேச அலுவலகம்,
இலங்கை மின்சார சபை,
பரந்தன்.

02029

## சீனாவிடமிருந்து மேலும் ஆயுதங்களை

# ஸ்ரீலங்கா கொள்வனவு செய்கிறது!

ஸ்ரீலங்கா அரசு மேலும் ஒரு தொகுதி கவச வாகனங்களையும், பீரங்கிகளையும் சீனாவிடமிருந்து கொள்வனவு செய்யவுள்ளது.

130 மி. மீற்றர் நீண்டவீச்சு பீரங்கி, 73 மி. மீற்றர் பீரங்கி, 76 மி. மீற்றர் இயந்திரத் துப்பாக்கி பொருத்தப்பட்ட ரி 85 ரக கவசவாகனங்கள் என்பனவே சீனாவிடமிருந்து புதிதாகக் கொள்வனவு செய்யப்படவுள்ளன.

இந்த சீன தயாரிப்பு ஆயுதங்கள் அடுத்த மாதம் கொழும்பிற்கு வந்து சேரும் என எதிர் பார்க்கப்படுகின்றது. ஸ்ரீலங்கா அரசு சீனாவிடமிருந்து இவற்றை 'நட்புறவு விலை' யிலேயே கொள்வனவு செய்கின்றமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

இவைதவிர கிழக்கு ஐரோப்பிய நாடுகள் தம்வசமுள்ள சிறு ரக ஆயுதங்களை உலக சந்தையில் மலிவு விலையில் விற்பனை செய்ய முன்வந்துள்ளதைப் பயன்படுத்தி ஸ்ரீலங்கா அரசும் தனக்கு தேவையான சிறு ரக ஆயுதங்களைப் பெருமளவில் வாங்க தீர்மானித்துள்ளதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஏற்கனவே கடந்த டிசம்பர் மாதம் ஸ்ரீலங்கா அரசு சீனாவிடமிருந்து வை-12 ரக விமானங்களையும் ஆயுதங்களையும் கொள்வனவு செய்திருந்தமை தெரிந்ததே.

## நீங்கள் மட்டுமல்ல...... உங்கள் குழந்தைகளும் இங்கு கடனாளிகளே!

ஸ்ரீலங்காவில் பிறக்கும் ஒவ்வொரு குழந்தையும் 17,000 ரூபா வெளிநாட்டுக் கடனுடன் பிறக்கிறது. இங்கு வாழும் ஒவ்வொரு பிரஜையும் 2600 ரூபா கடனுடன் வாழுகின்றனர். கடந்த 13 வருட திறந்த பொருளாதாரக் கொள்கையால் நாடு 1,54,744 மில்லியன் ரூபாவை வெளிநாட்டுக் கடனாகச் செலுத்த வேண்டியிருக்கிறது. ஐக்கிய தேசியக்கட்சி ஆட்சிக்கு வரும்போது 4.968 மில்லியன் ரூபாவாக இருந்த இக்கடன் 1991 ஆம் நடப்பாண்டில் 4,40,000 மில்லியன் ரூபாவரை செல்லும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

## மண்டைதீவில் இராணுவம் கைது செய்த 71 இளைஞர்களின் நிலைதொடர்ந்தும் மர்மம்

மண்டைதிவு, அல்லைப்பிட்டி, மண்கும்பான் ஆகிய இடங்களில் கடந்த ஆகஸ்ட் மாதம் ஸ்ரீலங்கா இராணுவத்தால் கைது செய்யப்பட்ட எழுபத்தொரு இளைஞர்களின் நிலை என்ன என்பது பற்றி இதுவரை எந்தவித தகவலும் அறியப்படவில்லை.

செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதிகளும் யாழ் அரசாங்க அதிபரும் இவர்கள் நிலைபற்றி அறிய எடுத்த முயற்சிகள் எதுவும் பலனளிக்கவில்லை.

இவர்கள் கைது செய்யப்பட்டு ஆறு மாதங்களுக்கு மேலாகி விட்டமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. (ப-12)

## சண்டிலிப்பாயில் சீனித் தொழிற்சாலை

யாழ் மாவட்டத் தெங்கு பனம்பொருள் உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாஜத்தின் ஆதரவில் பனம் சீனி தயாரிக்கும் தொழிற்சாலை யொன்று சண்டிலிப்பாயில் ஆரம்பிக்கப் படவுள்ளது.

இத் தொழிற்சாலைக்கான யந்திர சாதனங்கள் பொருத்தும்வேலைகள் தற்போதுமேற்கொள்ளப்பட்டு வருவதாக அறியப்படுகின்றது. (13)

## அனல் மின்நிலையம் நிறுவுவதற்கு ஆரியரத்னா எதிர்ப்புத் தெரிவிக்கிறார்

அனல் மின்நிலையம் ஒன்றை வெளிநாட்டு உதவியுடன் நிறுவுவதற்கு அரசு முன்னர் திட்டமிட்டிருந்தமை வாசகர்கள் அறிந்ததே.

பின்னர் வழமை போல் இத்திட்டம் தென்பகுதியிலுள்ள மாவங்கை என்னும் பகுதிக்கு மாற்றப்பட்டிருந்தது.

தற்போது அப்பகுதி மக்கள் அங்கு இந்த அனல் மின் நிலையம் அமைப்பதற்கு எதிர்ப்புத் தெரிவித்துள்ளனராம்.

இம் மின்நிலையத்தால் அப்பகுதியிலுள்ள சுற்றுப்புறச் சூழல் பாதிக்கப்படும் என்பதே இதற்குக்காரணமாம்.

இந்த எதிர்ப்பு நடவடிக்கையில் சர்வோதயத் தலைவர் ஆரியரத்தினாவே முன்னணியில் நிற்கிறாராம்.

## 'போராடாமல் இருந்திருந்தால் முழுமையாகவே அழிந்திருப்போம்'



''நாம் போராடாமல் இருந்திருந்தால் இதுவரையில் முழுமையாக அழிந்திருப்போம். போராடியபடியால் குறைந்தளவுபோராளிகளையே இழந்துள்ளோம்.''

''ஆனால் அநியாயமாக 5000 இளைஞர்கள் மாண்டுள்ளனர். இவர்களில் 500 இளைஞர்கள் போராட்டத்தில் இணைந்திருந்தால் ஏனைய 4500 இளைஞர்களைக் காப்பாற்றியிருக்கலாம் இன்னும் பல முகாம்களைக்கூடத் தகர்த்திருக்கலாம்.''

இவ்வாறு சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் நடைபெற்ற தென்மராட்சிக் கலைஞர்களுக்கான கலந்துரையாடலில் கலந்துகொண்டு உரையாற்றிய விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணியின் யாழ் மாவட்டப் பிரசாரப் பொறுப்பாளர் ஆஞ்சநேயர் தெரிவித்தார்.

தென்மராட்சிக் கலைகலாசாரப் பொறுப்பாளர் சகுந்தன் தலைமையில் இக்கலந்துரையாடல் இடம்பெற்றது. (ப-5)

## பல்கலைக்கழகத்தில் அஞ்சலிக்கூட்டம்

யாழ் பல்கலைக்கழக மட்டு-அம்பாறை மாவட்ட மாணவர் ஒன்றியம் அண்மையில் இன அழிப்பில் பலியாகிய யாழ் பல்கலைக்கழக மாணவர்களான என். கிருபாகரன் (முகாமைத்துவம்), ரி. தயாபரன்(கலை) ஆகியோருக்கு அஞ்சலி செலுத்தும் கூட்டமொன்றை 5-ம் திகதி செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3 மணிக்கு யாழ் பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடாத்தவுள்ளது.

## சென்னையில் அரச பேருந்துகளை நில வாயுமூலம் இயக்க முயற்சி

தமிழ் நாட்டில் பேருந்துகளை அழுத்தப்பட்ட நில வாயுக்கள் மூலம் இயக்குவதற்கான முயற்சிகள் எடுக்கப்பட்டுள்ளன.

இத்திட்டத்தின் முதல்கட்டமாக சோழன் போக்குவரத்துக் கழகத்தைச் சேர்ந்த 10 பேருந்துகள் சோதனை அடிப்படையில் அழுத்தப் பட்டநில வாயு மூலம் இயக்கப்படவுள்ளன. இதற்காக 18 லட்சம் ரூபா செலவிடப்படவுள்ளது.

அடுத்த கட்டமாக தமிழ் நாட்டில் 7000 அரச பேருந்துக்களை நில வாயுவின்மூலம் இயங்கச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக சென்னை எண்ணை சுத்திகரிப்பு நிலையம் தெரிவித்துள்ளது.

எரிபொருளை மீதப்படுத்தும் முகமாகவே இப்புதிய திட்டம் நடைமுறைப் படுத்தப் படவுள்ளது.

## கன்னியாகுமரி கடற் பாறையில் 133 அடிஉயர திருவள்ளுவர் சிலை

உலகின் அதி உயர் திருவள்ளுவர் சிலை கன்னியாகுமரியில் உள்ள கடற்பாறையில் தற்பொழுது அமைக்கப்பட்டு வருகின்றது.

133 அடி உயரமுள்ளதாக ஆறுகோடி ரூபா செலவில் இச்சிலை அமைக்கப்படவுள்ளது.

சிலை அமைப்பு வேலைகளில் 500 கைவினைஞர்கள் ஈடுபட்டுள்ளனர். மூன்று ஆண்டுகளில் இப்பெரிய சிலை அமைப்பு வேலைகள் முடிவுற்று விடும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இந்தியாவில் பிரச்சினைகளும் நெருக்கடிகளும் உள்ளன என்பது எல்லோருக்கும் தெரியும், ஆனால் மீட்சிக்குரிய வழிதான் ஒருவருக்கும் தெரியவில்லை. இந்திரநில் பனர்ஜி அதனை விரிவாக ஆராய்கிறார்.

# இந்தியா எங்கே போகிறது?

இந்தியா ஒரு நெருக்கடியான காலகட்டத்தைக் கடந்து கொண்டிருக்கிறது. இதை அங்குள்ள எல்லா அரசியல் வாதிகளும் நன்கு உணர்வர்.

அரசியல், பொருளாதார, சமூக, சமய பிரச்சினைகள் இந்தியாவுக்குப் பெரும் நெருக்கடியைத் தோற்றுவித்துள்ளன.

வேலையில்லாப் பிரச்சினை உச்சக்கட்டத்தில் உள்ளது. கோடிக்கணக்கான இளைஞர்கள் வேலைவாய்ப்பின்றி இருக்கும் அதேவேளை, சனத்தொகை கட்டுப்பாடின்றிப் பெருகுகிறது.

இந்த நிலையில் ''நான் ஓர் இந்தியன்'' என்ற தேசப்பற்றோ, தேசிய உணர்வோ இன்றி ஒவ்வொரு இந்தியனிலும் இன ரீதியாகவும், சமய ரீதியாகவும், சாதி ரீதியாகவும் சிந்தனை உருவாகியுள்ளது. ''நான் ஓர் இந்தியன்'' என்பதின் அர்த்தமே புரியாதநிலை ஏற்பட்டுள்ளது. இப்போதைய சூழ்நிலையில் சீக்கியர், காஷ்மீறின், அசாமியர் மட்டுமன்றி, வெவ்வேறு இனத்தையும், சமயத்தையும், சமூகத்தையும் சார்ந்தவர்கள் அதிருப்தியை வெளியிட்டுள்ளார்கள். உதாரணமாக அநேக தமிழர்களுக்கு மத்திய அரசிலும் பார்க்க யாழ்ப்பாணத்தில் வசிக்கும் தமிழ்மக்கள் மீது ஈடுபாடு அதிகமாக உள்ளது.

சாதிப்பிரச்சினை வன்செயல்களையும் உயிர்ச்சேதங்களையும் ஏற்படுத்தும் அளவுக்கு உச்சக்கட்டத்தை அடைந்துள்ளது. உயர்சாதி இந்துக்கள் பின்தங்கிய வகுப்பினர்களின் குறைபாடுகளைப்பற்றியோ, அவர்கள் படும் கஷ்டங்களைப் பற்றியோ சிந்திப்பதில்லை. அவர்களைப் பொறுத்தவரை மண்டல் கொமிஷன் அறிக்கை வீசி எறியப்படவேண்டும்.

கோடிக்கணக்கான தீவிரவாத இந்துக்களுக்கு அயோத்தியாவில் அதுவும் மசூதி இருக்கும் அதே இடத்தில், இராமர் கோயில் கட்டவேண்டும் என்ற எண்ணம் திடீரென உதயமாகி விட்டது. முஸ்லிம் மக்களின் உணர்வுகளைப்பற்றி அவர்கள் எள்ளளவும் கவலைப்படவில்லை.

இதில் கேலிக்கு இடமான விடயம் என்னவெனில் சில அரசியல்வாதிகள் நிலைமையைச் சாதகமாக்கி அரசியல் இலாபம்பெற முன்நிற்கிறார்கள். அவர்களைப்பொறுத்தவரை நாடு எக்கேடு கெட்டாலும் பரவாயில்லை, அவர்கள் கட்சியும் அவர்களும் வளரவேண்டும். அநேகமான அரசியல்வாதிகளிடம் இயக்கங்கள் தயார் நிலையில் உள்ளன.

அரசியல் கட்சிகள் கூடுதலாக மாநிலப்பிரச்சினைகளைப் பற்றியே சிந்திக்கின்றன. அவைபற்றியே பேசுகின்றன. தேசியப்பிரச்சினைகளில் அக்கறையும் ஈடுபாடும் உள்ளதாகக் காட்டும் கட்சிகளின் செயற்பாடுகள் விஸ்வாசமற்றனவாகக் காணப்படுகின்றன.

அரசியல்வாதிகளுக்கு மட்டுமன்றி, நாட்டில் அக்கறை கொண்டுள்ள பலருக்கு இந்தியாவின் மேற்கூறப்பட்ட பிரச்சினைகளும், அதனால் உருவாகியுள்ள நெருக்கடிகளும் நன்கு புரியும். எனினும் மீட்சிக்கு வழி ஒருவருக்கும் தெரியவில்லை. ஒரு காலத்தில் துணிச்சல் மிக்கவர் எனக்கருதப்பட்ட ராஜீவ் காந்தியினால்கூட இருபத்தியோராம் நூற்றாண்டில் இந்தியாவின் எதிர்காலம் எப்படி அமையும் என்று கூற முடியவில்லை.

மகாத்மாகாந்தியினாலும் நேருவினாலும் உருவாக்கிப் பேணப்பட்ட இலட்சியங்களையும், கொள்கைகளையும் தொடர்ந்தும் கடைப்பிடித்து நிலைநிறுத்தத் தவறிய காரணத்தினால் எதிர்க்கட்சிகளுக்கு மக்கள் மத்தியில் செல்வாக்குப் பெருகியுள்ளது.

காங்கிரசின் தவறான செயற்பாடுகளினாலும், அது இலட்சியக் கோட்பாடுகளில் இருந்து விலகியதினாலும், இந்திய அரசியல் சூழலில் பெரும் மாற்றம் ஏற்பட்டது.

இருப்பினும் எந்த ஒரு அரசியல் கட்சியிடமும் உறுதியான கொள்கைகளோ, இலட்சியங்களோ இல்லை. அவைகளால் நாட்டின் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண முடியும் என எதிர்பார்க்க முடியாது.

இந்திய தேசிய உணர்வையும் நாட்டுப்பற்றையும் வளர்க்க அயோத்தியில் இராமர் ஆலயம் அவசியம் என பி. ஜே. பி. கருதுகிறது.

ஜனதாதள் புதிய பாதையில் கால் ஊன்றி இருப்பதாகக் கூறுகிறது, 'வி. பி. சிங்கின் காலம் முடிந்துவிடவில்லை. இப்பொழுதுகூட அவர்தான் செல்வாக்கும் செயல் திறனும் மிக்க அரசியல்வாதி' என்று சொல்லுகிறார் ஜெய்பால்ரெட்டி.

இந்திரா காங்கிரசைப் பொறுத்தவரை இலட்சியக்கோட்பாடுகள் தன்னிடமே உள்ளதென அது நம்புகிறது.

இக்கட்சிகளால் இந்தியாவின் பிரச்சினைகளைத் தீர்க்க முடியுமா? இந்தியாவிற்கு நல்ல எதிர்காலத்தைக் கொடுக்க முடியுமா என்பதற்குக் காலம்தான் பதில் சொல்லும்.

# வளைகுடாப் போரின் விளைவுகளை விண்ணில் இருந்து பார்க்கவே புலப்படுவதாக ரஷ்ய விண் ஆய்வாளர்கள்!

யாழ் இந்து நூற்றாண்டு விழா:

## தமிழர் தவம்!

இராகம்: ஹம்ஸத்வனி தாளம்: ஆதி

பல்லவி

ஆயிரம் மைந்தரைப் பெற்றவளே — இந்து
அன்னையே தமிழர்தம் நற்றவமே — பல்
(ஆயிரம்)

அநுபல்லவி

தாயிடம் வருகின்ற சேய்களம்மா — நின்
தவவிருந் தால்எல்லாம் ஒங்குமம்மா — பல்
(ஆயிரம்)

சரணம்

ஒய்விலா(து) உன்புகழ் பாடுகின்றோம் — உன்
உயர்வு கருதுஒன்று கூடுகின்றோம்
ஆலய வாசலில் வந்து நின்றோம் — 'இந்து
அம்மா, அம்மா' என்று நைந்து நின்றோம் — பல்
(ஆயிரம்)

சங்கு முழங்குதல் கேட்டிலையோ — இது
சரித்திரம் படைக்கின்ற தருணமம்மா
பொங்கி எழுந்தனர் நின்புதல்வர் — ஈழம்
போர்முனை நிற்கிறார் அம்மறவர்! — பல்

— சோ. ப.

## மரக் கூட்டுத்தாபன ஊழியருக்கு 7 மாதங்களாக சம்பளம் இல்லை

யாழ் பிரதேச அரச மரக் கூட்டுத்தாபன ஊழியர்களது சம்பளம் 1990 ஆடி மாதம் தொடக்கம் இன்று வரையும் 7 மாதங்களாக வழங்கப்படவில்லை.

இது பற்றி யாழ் பிரதேச முகாமையாளர் கொழும்பு தலைமையகம் சென்றும் எது விதமான பலனும் கிடைக்கவில்லை எனவும், இந்த ஊழியர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

இதனால் இங்குள்ள 58 ஊழியர்களும் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். யாழ் அரச அதிபரிடமும் முறையிடப்பட்டுள்ளது. (33)

## பாடசாலை மாணவருக்கு விவசாயப் பயிற்சி

மாணவர்கள் கல்வியில் மட்டுமன்றி பசுமைப் புரட்சியிலும் ஈடுபட வேண்டியது அவசியம். இக்கால சூழலில் பாடசாலை ரீதியாக இதனை மேற்கொள்ளுமாறு கல்விப் பணிப்பாளர் இரா. சுந்தரலிங்கம் சுற்று நிருபம் மூலம் அதிபர்களுக்கு தெரியப்படுத்தியுள்ளார்.

தரிசு நிலங்களை பயிற்செய்கைக்கு பயன்படுத்தல், வீட்டுத் தோட்டங்களைச் செய்வதற்கு மாணவரை ஊக்குவித்தல், விவசாய பாடம் பயிலாத மாணவருக்கும் விவசாய செய்முறை அனுபவத்தை அளித்தல் போன்ற செயற்பாடுகள் மேற்கொள்ளப்படவுள்ளதாகவும் மேலும் தெரிவிக்கப்படுகிறது. (74)

### நாச்சிக்குடாவில்...

கள் என்பன முற்றாகச் சேதமடைந்தன. முழங்காவிலில் பாடசாலைக் கட்டிடம் சேதமடைந்தது. (71)

## காலமானார்

### திருமதி றோசலின் அமிர்தரட்ணம் வல்லிபுரம்

''ராணி கொட்'' இருபாலை, கோப்பாயில் வாசம் செய்தவரும், காலம் சென்ற சாமுவேல் வல்லிபுரம் என்பவரின் அருமை மனைவியும், புஷ்பமணி சோதிராஜா, ராசமலர் ஏபிரகாம், ஜோயிஸ் போப், சற்குணராணி ஜெயராஜா, அல்பேட் ஜெபநாயகம் (போதகர்-கானான் ஜெப ஆலயம்) ஆகியோரின் அன்பு தாயாரும், காலம் சென்ற செபபாக்கியம் தம்பு (Sister - இலங்கை பெந்தெகோஸ்தே சபை), மேரி திரவியம் சுப்பிரமணியம், இலைசா தங்கரட்ணம் தம்பு, விக்ரோறியா அன்னரட்ணம் தங்கரட்ணம் என்போரின் சகோதரியுமாகிய றோசலின் அமிர்தரட்ணம் மகிமைக்குள் பிரவேசித்து விட்டார். அன்னாரின் அடக்க ஆராதனை 05-02-91 செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3-00 மணிக்கு கானான் ஜெப ஆலயத்தில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
ஈ. ஏபிரகாம்
(மருமகன்)

''ராணி கொட்''
இருபாலை,
கோப்பாய்.

02031

இப்பத்திரிகை முரசொலி பப்பிளிஷேர்ஸ் (பிறைவேட்)லிமிற்றெட் நிறுவனத்தினரால் யாழ் கல்வியங்காடு டக்க வீதி, 'லக்ஷ்மிபில்டிங்' இல் உள்ள அச்சகத்தில் 03-02-1991 இல் அச்சிட்டு வெளியிடப்படுகிறது.

வளைகுடாவில் வெடித்துள்ள போரினால் சூழலில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள் விண்வெளியில் இருந்து பார்க்கும் போது புலப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

விண்வெளியில் தங்கியுள்ள சோவியத்தின்மீர் விண்வெளி ஆய்வு நிலையத்திலுள்ள சோவியத் விண்வெளி ஆய்வாளர்கள் இதுகுறித்த செய்திகளை சோவியத்யூனியன் தொலைக்காட்சிக்கு வழங்கியுள்ளனர்.

இவர்களது தகவலின் படி விண்வெளியில் இருந்து பார்க்கும் போதே வளைகுடாவில் பெரும் கரும் புகைப்படலம் காணப்படுகிறதாம் அத்துடன் வளைகுடா கடலில் நீரின் நிறம் மாறியுள்ளதையும் காணமுடிகிறதாம். இரவு நேரங்களில் இப்பகுதிகளில் இடைஇடையே மின்னல் போன்ற ஒளிக்கீற்றுகள் புலப்படுவதாகவும் இது குண்டு வெடிப்புக்களின் ஒளிக்கீற்றுகளாக இருக்கலாம் எனக் கூறுகின்றனர் இந்த சோவியத் விண்வெளி ஆய்வாளர்கள் இதனிடையே வளைகுடா கடலில் கலந்துள்ள எண்ணையின் அளவு கணிப்பிடப்பட்டுள்ளது. பதினொரு மில்லியன் பெரல் எண்ணை கடலில் மிதக்கிறது இது மூன்று பாரிய எண்ணைத் தாங்கிக் கப்பல்கள் கொள்ளக்கூடிய எண்ணையின் அளவு எனக் கூறப்படுகிறது.

### அமெரிக்கா மீது குற்றச்சாட்டு

தாம் நடாத்திய குண்டு வீச்சு தாக்குதல்களை அடுத்து தரையில் ஈராக்கிய படைகளின் நடவடிக்கையின் வேகம் குறைக்கப்பட்டு விட்டதாக அமெரிக்கா தெரிவித்துள்ளது இதேவேளை அமெரிக்கா தனது சிவிலியன் இலக்குகள் மீதும் பள்ளிவாசல்கள் மீதும் குண்டு வீசுவதாக ஈராக் தெரிவித்துள்ளது. இதனிடையே அமெரிக்காவின் 38 விமானங்களிற்கு இந்தியா பம்பாயில் வைத்து எரிபொருள் வழங்கியதை மீண்டும் ஈராக் கண்டித்துள்ளது. இந்த விமானங்களே எமது மக்களை கொல்ல பயன்படுகிறது என்பதைஇந்தியா உணரவேண்டும் என ஈராக் குறிப்பிட்டுள்ளது.

### லெபனானில் இவர்களிடையே மோதல்

தெற்கு லெபனானில் பாலஸ்தீன தீவிரவாதிகளும் இஸ்ரேல் இராணுவத்தினரும் தொடர்ந்து ஆட்லறி தாக்குதலிலும் ஏவுகணை தாக்குதலிலும் ஈடுபட்டு வருகின்றனர்.

### ஈராக் பிரதிபிரதமரின் மர்ம விஜயம்

ஈராக்கின் பிரதிப்பிரதமர் அமாதி ஈரானிற்கான தனது விஜயத்தை முடித்துக் கொண்டு திரும்பியுள்ளார். இவர் அங்கு ஈரான் ஜனாதிபதி ரவ்சஞ்சானி, வெளியுறவு அமைச்சர் அலிஅக்பர் வாலியாத்தி ஆகியோர்களுடன் பேச்சு நடாத்தினார். ஈராக் ஜனாதிபதி ஹுசைன் கொடுத்த செய்தி ஒன்றையும் அமாதி ஈரானிய ஜனாதிபதியிடம் வழங்கினார். ஈராக்கிய உதவிப்பிரதமரின் ஈரான் விஜயம் மற்றும் ஹுஸைன் கொடுத்தனுப்பிய செய்தி குறித்து எந்தத்தகவலும் வெளியிடப்படாது மர்மமாகவே உள்ளதாக மேற்குலக செய்திகள் தெரிவிக்கின்றன.

### குண்டு...

கலாம் என நம்பப் படுகிறது.

காட்டிற்குள் விறகு வெட்டச் சென்ற இலர் நேற்று முன்தினம் இச் சடலத்தை கண்டெடுத்தனர். பலர் இப்படியாகக் காட்டிற்குள் ஒடியதாகக் கூறப்படுகிறது.

திருகோணமலையிலிருந்து இடம்பெயர்ந்து முல்லைத்தீவுக்கு வந்திருந்த அகதிகளே பெரும்பாலும் இத்தாக்குதலில் பாதிக்கப்பட்டுள்ளனர். (70)

### நாவற்குழித்...

கையில் காயமேற்பட்டதுடன் அவர் இருந்த மரம் பாதியில் முறிந்து வீழ்ந்து விட்டது.

இவரது அருகில் குண்டு வீழ்ந்துவெடித்ததால் இவரின் ஒரு காது செயலிழந்து விட்டது. (ப-14, 33)

### முறிகண்டியிலும்...

காயமடைந்து கிளிநொச்சி ஆஸ்பத்திரிக்கு கொண்டு செல்லப்படுகையில் மரணமானார்கள். (35, 33)

### குமரபுரத்தில்...

தாக்குதலை மேற்கொண்டது.

இதே நேரத்தில் ஹெலிகொப்டரும்தாக்குதலை மேற்கொண்டது. (33 35)

### கொக்குவிலில்...

வலது காலை இழந்தார்.

என். துரைராஜா, எஸ். அம்பிகாபதி, எஸ். பாலசுப்பிரமணியம் ஆகியோர்களது வீடுகள் சேதமடைந்தன.

அகதி முகாமில் 25 பேர் இருந்தபோதும் தெய்வாதீனமாக உயிரிழப்பு ஏதும் ஏற்படவில்லை.

அ பிரேமாவதி(27), எஸ். அம்பிகாவதி 52), எ. சிறிஸ்கந்தராஜா(49) ஆகியோர் காயமடைந்தனர். (ப- 14,70, 33)

## சிறிய செய்திகள்

### பதுக்கிய மண்ணெண்ணெய்

காரைநகர் வலந்தலைப் பகுதியில் உள்ள ஐயகபேயினுள் பதுக்கிவைக்கப் பட்டிருந்த 260 லீற்றர் மண்ணெண்ணையை விடுதலைப் புலிகள் கைப்பற்றினர். (ப- 31)

### மத்தியகல்லூரி மாணவர்கள் இரத்த தானம்

யாழ் மத்தியகல்லூரி மாணவர்கள் பதினெருவர் கடந்த 30-ம்திகதி யாழ் ஆஸ்பத்திரியில் இரத்த தானம் செய்தனர்.

யாழ் போதனா வைத்தியசாலை இரத்த வங்கியில் சில குறிப்பிட்ட ரக இரத்தத்துக்கு தட்டுப்பாடு நிலவுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (74)

### சங்கானையில் 'இயூ' மீது சூடு

சங்கானையில் நேற்றுஹெலியிலிருந்து வேட்டுக்கள் தீர்க்கப்பட்டன. இயூவில் மக்கள் நின்று பொருட்களை வாங்கிக்கொண்டு நின்ற சமயமே வேட்டுக்கள் தீர்க்கப்பட்டது. அப்பாத்துரை மில்லும் இரண்டு கடைகளும் சேதமடைந்தன. (ப- 1)

### மனவருத்தத்துடன்...

இன்றியே தாம் இந்த முடிவை எடுத்ததாகவும் மத்திய அரசு கூறியதை தமிழக அரசு கேட்காமையினாலேயே இம்முடிவு நடைமுறைப்படுத்தப் படவேண்டி ஏற்பட்டது எனவும் அவர் கூறினார்.

### சாவகச்சேரி...

கடைகளில் 8 ரூபாவாகவும் விற்பனை செய்கிறார்கள்

இதேவேளையில் இங்கு தயாரிக்கப்படும் பாண் சாவகச்சேரிக்கு வெளியே 12 ரூபா முதல் 15 ரூபா வரை விற்பனை செய்யப்படுகின்றது.

இங்குள்ள ஒரு சிற்றூரவைத் தலைவரினால் நடாத்தப்படும் பேக்கரியிலும் பணிஸ் வியாபாரம் நடைபெறுகிறதாம்

இதேபோல கேக் தயாரித்து ஒரு துண்டு ஐந்து ரூபா வீதம் விற்பனை செய்யப்படுகிறது எனவும் பொது மக்கள் புகார் தெரிவிக்கின்றனர். (ப 5)

### மாணவர் இயக்கக்கூட்டம்

இன்று காலை 10 மணியளவில் வி. பு. மாணவர் இயக்க உறுப்பினர்களுக்கான மாதாந்த ஒன்று கூடல் நிகழ்ச்சி யாழ் பல்கலைக்கழக கைலாசபதி கலை அரங்கில் நடைபெறவுள்ளது. (71)

### முல்லையில் இறுதி அஞ்சலி

மணலாறு மோதலில் வீரமரணமடைந்த முல்லை மாவட்டப் பொறுப்பாளர் மேஜர் காந்தன், கப்டன் புத்தா ஆகியோரின் புகழுடல்கள் முல்லை மாவட்டம் எங்கும் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டது. மல்லாவி, கிளிநொச்சி, தண்ணீரூற்று பகுதிகளில் மக்கள் திரண்டு இவர்களுக்கு தமது இறுதி அஞ்சலியைச் செலுத்தினர். (71)

### பொருள்களுக்கு தட்டுப்பாடு

மன்னார்த்தீவு இராணுவத்தின் கட்டுப்பாட்டில் இருக்கின்ற போதிலும் அத்தியாவசியப் பொருள்களுக்கு பெரும் தட்டுப்பாடு நிலவுகின்றன. விலையும் அதிகமாக உள்ளது என அங்கிருந்து வருபவர்கள் தெரிவிக்கின்றனர். (33)

### தமிழகத்தில்...

சியுள்ளனர். இதேசமயம் சேலத்தில் பதற்றநிலை இருந்துவருவதை தொடர்ந்து அங்குள்ள சகல பஸ் டிப்போக்களிற்கும் பொலிஸ் பாதுகாப்பு போடப்பட்டு இரவுச் சேவையும் நிறுத்தப்பட்டுள்ளது.

### காரைநகர்...

தினம் இரவு குடிமனைகளை நோக்கி கலிபர் தாக்குதலும் இடையிடையே ஷெல் தாக்குதலும் மேற் கொள்ளப்பட்டது.

நேற்றுக் காலை நடாத்திய ஷெல் தாக்குதலின் போது கருங்காலி முருகமூர்த்தி கோவிலடியைச் சேர்ந்த பொன்னம்பலம் என்பவரது வீடு சேதமடைந்தது, மற்றொரு ஷெல்லினால் மாடு ஒன்றும் இறந்தது. (ப-31)